# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஜனவரி 3, 2026 Weekly E-paper • January 3, 2026




## ஆட்டம் போடும் அழிவு சக்திகள்!

சுப. வீரபாண்டியன்

## பாரதியும் நமது பார்வையும்!

வெற்றிச்செல்வன்

## புத்தாண்டு வாழ்த்துகள்

தலையங்கம்

## இயக்கச் செய்திகள்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஜனவரி 3, 2026 Weekly E-paper ● January 3, 2026

## ஆட்டம் போடும் அழிவு சக்திகள்!

## திரையில் சிறைப்பட்டோம்!

சுப. வீரபாண்டியன்



அன்புக்கு வழிவகுக்க வேண்டிய ஆன்மீகம், இப்போது வம்புக்கு வழி வகுக்கிறது என்று தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவலையோடு தன் கருத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்!

அண்மையில் உத்தரப் பிரதேசத்தில் உள்ள காசியாபாத் கிருத்துவ தேவாலயத்திற்கு முன்பு, இந்து ரக்ஷா தள் என்ற அமைப்பினர், ஒரு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்!

தேவாலயத்துக்கு முன்பு ஒரு மேசையை வைத்து, அதன் மீது வாள், ஈட்டி, வேல் போன்ற ஆயுதங்களை அடுக்கி, ஜெய்ஸ்ரீராம் என்னும் கோஷத்தைத் தவிர வேறு முழக்கம் எதுவும் இங்கு கேட்டால், இனி எங்கள் கைகள் அவற்றுக்குப் பதில் சொல்லாது, இவைதான் பேசும் என்று கூறி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்!

இது நாடா அல்லது விலங்குகள் வாழும் காடா என்று தெரியவில்லை. நம் நாட்டிற்கு என்று ஓர் அரசமைப்புச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் எல்லோருக்கும் வழங்கியிருக்கும் உரிமைகளில் ஒன்று, மத உரிமை ! அதை முழுமையாக இந்து மத வெறிக் கூட்டங்கள், கொன்றழித்துக் கொண்டிருக்கிறார்கள்!

வடநாட்டில் மட்டுமின்றி, நம் தமிழ்நாட்டிலும் இதுபோன்ற செயல்கள் சில தொடங்கி இருக்கின்றன. தூத்துக்குடியில் அனுமன் ஜெயந்தி என ஒரு புதிய விழாவைத் தொடங்கி இருக்கிறார்கள். ஆயிரம் இளநீர்களை வாயால் கடித்து, தலையில் உடைப்பது என்பதே அந்த விழாவின் மையம்.

தலையில் தேங்காய் உடைத்தால், நரம்பு மண்டலம் பாதிக்கப்படும் என்னும் மருத்துவ அறிவுரைகள் எல்லாம் குப்பையில் வீசப்பட்டுள்ளன!

எல்லோரும் மிக மிகக் கவனமாக இருக்க வேண்டிய நேரம் இது! இந்த நாடு மத வெறியர்களால் அழிக்கப்படுவதற்கு முன், அதனைக் காப்பதற்கு ஜனநாயக சக்திகள் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய நேரம் இது!




சிறைகளைப் பற்றி இதற்கு முன்பும் பல திரைகள் பேசி இருக்கின்றன! இப்போது மீண்டும் திரையில் ஒரு சிறை வந்திருக்கிறது!

படத்தின் இறுதியில் பாத்திரங்கள் விடுதலை ஆகிவிடுகின்றன!

ஆனால் பார்த்தவர்கள் சிறைப் படுகின்றனர்!

சிறை கொடியதுதான்... ஆனால் வெளியில் இருக்கும் மத வெறியும் மது வெறியும் அதனினும் கொடியவை என்பதை இந்தத் திரைப்படம் எவ்வளவு நுட்பமாகச் சொல்கிறது!

கதாநாயகன் பெயர் அப்துல் ரவூப்! காரணத்தோடு தான் அது வைக்கப்பட்டிருக்கிறது!

எரியும் ஈழத்தைக் காப்பதற்காக எரிந்து போன இன உணர்வுத் தீப்பந்தம் அவன் என்பதையும் ஒரு காட்சி உரத்துச் சொல்கிறது!

இஸ்லாமியர் என்றாலே தீவிரவாதி என்னும் பாசிசச் சிந்தனையை இன்னொரு காட்சி இடுப்பொடித்துப் போடுகிறது!

இது இயக்குனரின் முதல் படமென்று இனியும் சொல்லாதீர்கள். எவனும் நம்பமாட்டான்!

கதையின் அழகை, நடிப்பின் திறனை, ஒளிப்பட நேர்த்தியை இசையின் இனிமையை.... ஒவ்வொன்றாய்ப் பாராட்ட இன்னொரு திரைப்படம் எடுக்க வேண்டி வரும்!

சந்தை இரைச்சலிலே சங்கீதம் கேட்காது! நல்ல படங்கள் நாட்டில் ஓடாது என்று சொல்வார்கள். பொருளாதார அடிப்படையிலும் இப்படம் பெற்றிருக்கும் வெற்றியைப் பார்த்தால், இனிமேல் நல்ல படங்கள் மட்டும்தான் ஓடும்போல் தெரிகிறது!

# பாரதியும் நமது பார்வையும்!

**வெற்றிச்செல்வன்**

அண்மையில் பாரதியார் குறித்து நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், ஆர்.எஸ்.எஸ். சார்புடைய விஜில் அமைப்பின் மேடையில் பேசியது சமூக ஊடகங்களில் மிகுந்த பேசுபொருளானது. பாரதியார் குறித்த நேர்மறையான, எதிர்மறையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. பாரதியாரை மட்டும் முன்னிலைப்படுத்திப் பெரியாரைப் புறக்கணித்த பொதுவுடைமை இயக்கங்களும் விமர்சனத்தில் இருந்து தப்பவில்லை. இவற்றைத் தாண்டி, பாரதியாரை சநாதன பாரதி என்றழைப்பது மட்டுமின்றி, வேறு சில அநாகரிகமான விமர்சனங்களும் இணையத்தில் நிகழ்ந்தன. பெரியாரையும் பாரதியாரையும் எதிர்நிலையில் நிறுத்தி யார் பெரியவர்? என்று விவாதிக்கும் போக்கும் நடைபெற்றது.



விமர்சனங்களுக்கு யாரும் அப்பாற்பட்டவர்களில்லை. பாரதியாரின் செயல்பாடுகளைத் தொடர்ச்சியாகத் திராவிட இயக்கம் விமர்சித்து வந்துள்ளது. “திராவிட இயக்கப் பார்வையில் பாரதியார்?” என்ற தலைப்பில் தோழர் வாலாசா வல்லவன் எழுதியுள்ள நூல் சான்றுகளுடன் எழுதப்பட்ட முக்கியமான நூலாகும்.

சமஸ்கிருதத்தை பொதுமொழியாகக் கொள்ளலாம் என்ற கட்சியை ஆதரித்து எழுதியவர் பாரதியார் (பாரதி புதையல் பெருந்திரட்டு, ரா. அ. பத்மநாபன், ப. 274). பள்ளிகளில் தெய்வபக்தி, தேசபக்தி முதலியவற்றைக் கற்பிக்க வேண்டும். மதநூல்களைக் கற்பிக்க வேண்டும் என்றவர் பாரதி (இந்தியா தலையங்கம், 31.07.1909). கீதையைப் போற்றியவர்; பார்ப்பனரல்லாதார் என்பதையே ஏற்றுக் கொள்ள மறுத்தவர்; ”வேதம், சாஸ்திரம், பாஷைகள் தொடங்கி திருக்குறள், ஆண்டாள் திருமொழி வரைக்கும் அனைத்தையும் ஆர்ய சம்பத்து” என்று கூறியவர் பாரதி. இவற்றையெல்லாம் திராவிட இயக்கம் ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை.

அதே நேரம், எப்படிப்பட்ட பாரதியாரை மறைத்து விட்டார்கள்; எந்த பாரதியாரை நாம் வெளிக்கொணர வேண்டும் என்பதை அறிஞர் அண்ணா நமக்குத் தெளிவுபடுத்துகிறார் (திராவிட நாடு, 19.10.1947). ’பேராசைக்காரனடா பார்ப்பான், பொய்மைப் பார்ப்பார்’ என்று பார்ப்பனரின் பித்தலாட்டங்களை, பார்ப்பன சமூகத்திலேயே பிறந்து பேசியவர் பாரதியார். அச்சமூகத்தின் வெறுப்பிற்கு ஆளானவர். பாரதி விழா மேடைகளில் இத்தகைய குரல் கேட்டதுண்டா என்கிறார் அண்ணா. மேலும், பாரதியாரின் காலம் வேறு; இக்காலம் வேறு. எனவே இன்றுள்ள எண்ணங்களையெல்லாம் அவர் அன்றே ஆய்ந்தறிந்து கூறியிருக்க வேண்டுமென்றோ, வரலாற்று உண்மையான ஆரிய-திராவிடர் பிரச்சினையை அவர் கூறியிருக்க வேண்டுமென்றோ நாம் எதிர்பாப்பதற்கில்லை என்று அண்ணா அறிவுறுத்துகிறார்.

பாரதியின் மீது கொண்ட பற்றினால் தனது பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டவர் புரட்சிக்கவிஞர். அவர் பாரதியார் மீதும், அவருடைய முற்போக்கான கருத்துகள் மீதும் நம்பிக்கையும், மதிப்பும் கொண்டிருந்தார். அதே நேரம் பாரதியாரின் கடவுள், மதம் சார்ந்த கொள்கைகளை அப்படியே ஏற்றுக் கொண்டவரல்லர் பாரதிதாசன். தெய்வம் நமக்குத் துணை பாப்பா என்றார் பாரதியார். ஆனால், தெய்வீகத்தை நம்பும் திருந்தாத பெண்குலம் என்றார் பாரதிதாசன்.

ஆணும் பெண்ணும் நிகரெனச் சொன்னவர்; சாதிக் கொடுமைகளைச்சாடியவர்;குழந்தைத்திருமணம்போன்ற சமூகக் கொடுமைகளைச் சாடியவர். அவர் வாழ்ந்தது மொத்தம் 39 ஆண்டுகள் மட்டுமே; அவர் வாழ்ந்த காலம், காலகட்டம், அவர் பிறந்த சமூகம் ஆகிய அனைத்தையும் கணக்கில் கொண்டு பாரதியாரைப் பார்க்க வேண்டுமே தவிர அவரது கவிதைகளில் சிலவற்றை மட்டுமே எடுத்துக் கோண்டு அவரை ’இப்படிப்பட்டவர்தான் பாரதியார்’ என்று முற்றுமுழுதாக நிறுவ முயற்சிப்பது, அல்லது நிராகரிப்பது அறிவுடையார் செயல் ஆகாது.

அது மட்டுமல்ல, பெரியாரையும் பாரதியாரையும் ஒப்பிடுவதே சரியாக இருக்காது. பெரியார் சமூக இயக்கம் கண்டவர்; சமரசமில்லாத போராளி; பொது நன்மைக்காகச் சிறையில் துன்பங்களை அனுபவித்தவர்; மிக நீண்ட நெடிய பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர். அவருடையசெயல்பாடுகளைபாரதியாருக்குஅருகிலேயே கொண்டு செல்ல முடியாது. மேலும், பாரதியாரோடு பெரியாரை ஒப்பிட்ட சீமானின் பேதைமையை நாம் தோலுரிக்க வேண்டுமே அல்லாது, இந்த நேரத்தில் நாம் சீமானுக்காக பாரதியின் பிற்போக்குத்தனங்களை ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டியதில்லை என்பதே உண்மை.

●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## புத்தாண்டு வாழ்த்துகள்

2025 ஆம் ஆண்டின் கடைசி நாள் மறைந்துவிட்டது நள்ளிரவு 12 மணிக்கு. உடனே 2026ஆம் ஆண்டின் முதல்நாள் பிறந்துவிட்டது. அனைவருக்கும் நம் உலகப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அமைதி நிலவ வேண்டும், சநாதனம் ஒழியவேண்டும், சமூகநீதி பிறக்க வேண்டும், சாதி, மத, சமூகங்கள் மறைந்து சமத்துவம் வரவேண்டும், பகுத்தறிவும், சுயமரியாதையும் மேலோங்க வேண்டும் என்ற பார்வையில் புத்தாண்டைப் பார்க்க வேண்டும் என்பதுதான், திராவிடம்.

இதற்குநேர் எதிராகப் பார்ப்பன ஆதிக்கம், சூத்திர அடிமைத்தனம், சநாதனம், சாதி-மதக் கலவரங்கள், மதவெறித்தனங்கள் என்று மக்களின் அமைதியைக் குலைக்கும் வேலைகளில் காவிகளின் அமைப்புகள் முன்னெடுத்து வருகின்றன, இது அபாயத்தின் அறிகுறி.

அன்று லால்கிஷன் அத்வானியின் ரதயாத்திரை பாபர் மசூதியை இடிப்பதில் வந்து நின்றது, வடநாட்டு அயோத்தியில். இன்று வேல்யாத்திரை வடிவில் அதே நிலையை உருவாக்க முயல்கிறார்கள் காவிகள் தமிழ்நாட்டின், திருப்பரங்குன்றத்தில்.

இரண்டு நாள்களுக்கு முன்னர்,"திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்றாமல் இருக்க முடியாது. அதைத் தடுப்பவர்களை சிவபெருமான் பார்த்துக் கொள்வார். இதை அரசியல் ரீதியாகத் தமிழக அரசு பார்ப்பது கண்டனத்திற்கு உரியது" என்று மதுரையில் பேசியிருக்கிறார் தர்மேந்திரப் பிரதான். இது மதரீதியாக அமைதியைத் தகர்க்கும் பேச்சு.

வன்முறையை, அமைதியற்ற நிலையை, மூடநம்பிக்கையை, பிற்போக்குத் தனங்களை, அடிமைத் தனத்தை, மதவெறியைத் திராவிடச் சித்தாந்தம் ஏற்றுக்கொள்ளாது.

ஏற்றத்தாழ்வற்ற சமத்துவத்தை நோக்கி, தடைகளைக் கடந்து ஐயா தந்தை பெரியாரின் வழியில், தமிழ்நாட்டில் சில மாதங்களில் மீண்டும் உதிக்கப்போகும் 'உதயசூரிய'னைக் காணும் வரையும் -

அனைவருக்கும் மீண்டும் உலகப்புத்தாண்டு வாழ்த்துகள்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408




**பெரியார் நினைவு தின பொதுக்கூட்டம் சனவரி 04, 2026 அன்று சின்னக்கடைத் தெரு, மயிலாடுதுறையில், மாலை 6 மணிக்கு நடைபெற உள்ளது. தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.**

**-இரா.அருள்ஜோதி பாபா,**
**மாநிலச் செயலாளர்,**
**திராவிட மாணவர் பேரவை.**

# இளைஞரணிப் பொறுப்பாளர்கள் நியமனம்

திராவிட இயக்க தமிழர் பேரவையின் இளைஞரணிப் பொறுப்பாளர்களாக மாநில இளைஞரணிச் செயலாளர் தீபன் ராமஜெயம் பரிந்துரையை ஏற்றுக் கீழ்கண்ட தோழர்கள் இளைஞர் அணிப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

மாநில துணைச் செயலாளர் : வெற்றிச்செல்வன்
மாநிலத் துணைச் செயலாளர் : சண்முகவேல் பிரபாகரன்
மாநிலத் துணைச் செயலாளர் : எட்வின் தர்மராஜ்
சென்னை மாவட்ட அமைப்பாளர் : ராஜேஸ்குமார்
செங்கல்பட்டு மாவட்ட அமைப்பாளர் : முல்லைவேந்தன்
பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் : விடுதலைச் செல்வன்
திருவண்ணாமலை மாவட்ட அமைப்பாளர் : தி.க.சு.உதயகுமார்
ராணிப்பேட்டை மாவட்ட அமைப்பாளர் : நவீன்குமார்
காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பாளர் : தமிழரசன்
தென்காசி மாவட்ட அமைப்பாளர் : ஜோ.சுஜய்
கோவை வடக்கு மாவட்ட அமைப்பாளர் : ஸ்ரீஹரி
கோவை தெற்கு மாவட்ட அமைப்பாளர் : அஜித்
கோவை மாநகர அமைப்பாளர் : கௌதம்
திருப்பூர் மாநகர அமைப்பாளர் : அரவிந்த்
திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் : மதன்
ஈரோடு புறநகர் மாவட்ட அமைப்பாளர் : ஆதி
சேலம் மாவட்ட அமைப்பாளர் : பிரவீன்குமார்
மதுரை மாவட்ட அமைப்பாளர் : கார்த்திகேயன்

**தோழர்களின் பணி சிறக்க வாழ்த்துகள்.**

**சிற்பி செல்வராசு,**
பொதுச்செயலாளர்,
திராவிட இயக்கத் தமிழர் பேரவை




கடந்த 26-12-2025 அன்று 'இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம்' சார்பில் இரண்டு நூல்கள் திறனாய்வு கூட்டம் சென்னை கோடம்பாக்கம் அரங்கத்தில் நடந்தது. கூட்டத்திற்கு இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் தாம்பரம் இளங்கோ தலைமையும், பேரவையின் மாநில இளைஞர் அணிச் செயலாளர் தோழர் தீபன் வரவேற்புரையும், பேரவையின் மாநில அமைப்பு செயலாளர் தோழர் எட்வின், துணைப் பொதுச் செயலாளர் தோழர் உமா, சென்னை மாவட்டத் தலைவர் தோழர் கார்த்திக் முன்னிலையும் வகித்தனர். தமிழ்நாடு பாடநூல் கழகம் சார்பில் தோழர் வெற்றிச் செல்வன் தொடக்கவுரையாற்றினார். தமிழ்நாடு பாடநூல் கழகம் வெளியிட்ட 'பேரா.க.அன்பழகனார் நினைவு வழித்தடம்' எனும் நூலைப் பேரவையின் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் திறனாய்வு செய்து சிறப்புரையாற்றினார். தோழர் இக்லாஸ் தொகுத்த பேரவையின்தலைவர்சுப.வீஅவர்களின்'மொழியும்,மனிதனும்'எனும் நூலைத் தோழர் சொக்கலிங்கம் திறனாய்வு செய்து உரையாற்றினார். இந்நிகழ்வில்மொழியும்மனிதனும்நூலைகருஞ்சட்டைதிப்பகஇயக்குநர் தோழர் பெல்.இராஜன் வெளியிட, நூலைப் பேரவையின் கல்வி உதவித் திட்டத்தின் தலைவர் தோழர் லாரன்ஸ் அவர்கள் பெற்றுக் கொண்டார். சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் திராவிடமணி~ நன்றியுரையாற்றினார்.




சிவகங்கை மாவட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கலந்துரையாடல் கூட்டம் 31.12.2026 காலை 10.30 மணி முதல் 11.30 மணிவரை காரைக்குடி மாவட்டத் தலைவர் தோழர் தி.க.கலைமணி தலைமையில் நடைபெற்றது. திராவிட நட்புக்கழக மாவட்ட அமைப்பாளர் ச.சிதம்பரம், இயக்கத் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் ந.நவில், இனமானப் பேராசிரியர் படிப்பு வட்ட ஒருங்கிணைப்பாளர் துரை.செல்வம் முடியரசன், திராவிட முழக்கம் இதழின் பொறுப்பாசிரியர் குமரன்தாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

1) திராவிட முழக்கம் இதழ் ஆண்டுக் கட்டணம் புதுப்பித்தல், புதிய ஆண்டுக் கட்டணங்கள் சேர்த்தல், 2) ஜனவரி/ பிப்ரவரியில் கருத்தரங்கம் (அ) கூட்டம் நடத்துவது 3) இனி ஒவ்வொரு மாதமும் மாவட்டத்திலும் கலந்துரையாடல் கூட்டத்தினை நடத்துவது, 4)அய்யா இராம. சுப்பையா அவர்களின் பெயரினைப் புதிதாகக் கட்டப்பட்டு வருகின்ற காரைக்குடி மாநகர்மன்றக் கட்டிடத்திற்கு சூட்டக் கோரி அமைச்சர்,சட்டமன்றஉறுப்பினர்,மேயர்,ஆகியோரிடம்மனுகொடுப்பது. 5)புதிய உறுப்பினர்கள் சேர்க்கை, திராவிட முழக்கம் இதழ் வளர்ச்சி நிதி பெறுவது என்று தீர்மானிக்கப் பட்டது.